ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1526/ 11 – 2007 දෙසැම්බර් 04 වැනි අඟහරුවාදා – 2007.12.04
1526/ 11 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கண்டி மாவட்டம், கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கங்க இஹல கோரளை சிறு பிரிவில், உலப்பன கிராமத்தில் அமைந்திருக்கும் கண்டி மாவட்ட நில அளவையாளர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட 2007.10.12 ஆந் திகதியிடப்பட்ட மு. பி. மஹ. 5792 வரைப்படத்தில் துண்டு இல. 1 மற்றும் 2 எனக் குறிப்பிடப்பட்ட ஹெக்டயார் 0.6616 விஸ்தீரணம் உடைய காணித் துண்டுகளின் எல்லைகள் :–

01. **துண்டு இல. 1 – நியுபர்ன்லன்ட் – விஸ்தீரணம் : 0.0583 ஹெக்யடார்**

வடக்கு : மு. பி. மஹ. 5387 இல் துண்டு இல. 115 மற்றும் ஜே. எம். இக்பால் மற்றும் பலர் உரிமை கோரும் நியுபர்ன்லன்ட் தோட்டம் ; கிழக்கு : இப்பாதையின் மிகுதிப் பகுதி ; தெற்கு : இவ்வரைபடத்தின் துண்டு இல. 2 மற்றும் மு. பி. மஹ. 5387 இல் துண்டு இல. 116 மற்றும் பீ. இப்றாஹிமிற்கு உரிமை கோரும் நியுபர்ன்லன்ட் ; மேற்கு : நாவலப்பிட்டி – கம்பளை செல்லும் பிரதான பாதை.

02. **துண்டு இல. 2 – நியுபர்ன்லன்ட் – விஸ்தீரணம் : 0.6033 ஹெக்யடார்**

வடக்கு : எம். இப்றாஹிம் உரிமை கோரும் நியுபர்ன்லன்ட் தோட்டம் ; கிழக்கு : எம். ஆர். எம். நசீர் உரிமை கோரும் நியுபர்ன்லன்ட் தோட்டம் ; தெற்கு : எம். ஆர். எம். நசீர் உரிமை கோரும் நியுபர்ன்லன்ட் தோட்டம் மற்றும் ஓடை ; மேற்கு : ஓடை.

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : எம். ஆர். எம். நசீர், நியுபர்ன்லண்ட் தோட்டம், உலப்பன.

மேற்குறித்த காணிக்கு காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2008.01.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கங்க இஹல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2008.01.14 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். டி. ரஞ்சனி ஜயகொடி,
பிரதேச செயலாளர்,
கங்க – இஹல,
குருந்து வத்த கட வீதிய.

பிரதேச செயலகம்,
கங்க – இஹல,
2007.12.03.

12 – 506

திருத்தம்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ஹோம/3/2000/சுவீ/01.

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகள் 2007.11.26 ஆம் திகதிய 1212/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காணி சுவீகரித்தல் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் திருத்தம் செய்யப்படுகிறது.

துண்டு இல. 42

காணியின் பெயர் : மீகஹவத்தை ; உரிமை கோருபவர் : டீ. ரீ. ஜீ. சேனாரத்ன ; விஸ்தீரணம் : 0.0167 ஹெக்டயார்.

துண்டு இல. 43

காணியின் பெயர் : மீகஹவத்தை ; உரிமை கோருபவர் : ரீ. அம்பகஹதூவ ; விஸ்தீரணம் : 0.0017 ஹெக்டயார்.

ஏ. ஜே. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2007.10.10.

12 – 602

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.